இந்திய
நியுட்ரினோ
அறிவியற்கூடம்

# சில கூற்றுகள் ...

## இது ஒரு அணு ஆயுத தொழிற்சாலை அல்ல.

இது காற்று மண்டலத்தில் உருவாகும் நியுட்ரினோ எனப்படும் துகள்களை பற்றி ஆராயும் ஒரு அடிப்படை அறிவியல் ஆராய்ச்சிக் கூடம். இந்த திட்டதின் முழு விவரமும் நீங்கள் இணையதளத்தில் காணலாம். ஒரு அணு ஆயுத தொழிற்சாலையின் விவரங்கள் ஒருபோதும் இப்படி பொதுமக்களின் பார்வைக்கு தரபடமாட்டா.

## யாருக்கும் கேடு விளைவிக்காதது.

இத்திட்டம் அனைத்து உயிர்வாழினத்திற்கும் பாதுக்காப்பானது . நம் மும்பையில் இதே போன்ற சிறிய அமைப்பு ஒன்றில் மாணவ மாணவியர் அன்றாடும் ஆராய்ச்சி செய்கின்றனர். அவர்கள் ஒரு ஆபத்துமின்றி இருப்பது மட்டுமன்றி இந்த பெரிய அமைப்பை காண ஆர்வம் கொண்டுளார்கள்.

## ஆபத்தான கதிர்களை உமிழாது.

நம் உடம்பை ஊடுருவி ஒவ்வொரு நொடியும், ஆயிரக்கணக்கான இயற்கையான நியுட்ரினோக்கள் செல்கின்றன. நாம் அதை உணர்வதும் இல்லை, அது நம்மை பாதிப்பதும் இல்லை. இத்திட்டம் இல்லாமல் போனாலும் இச்செயல் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். இத்திட்டம் எந்தவித கொடிய கதிரியக்கத்தையும் கொண்டிராது.

## நிலத்தையும் நீர்வளத்தையும் பாதிக்காது

சுற்றுச்சூழல் பாதிக்காவண்ணம் இத்திட்டம் நிறைவேற எல்லா நடவடிக்கையையும் நம் விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளார்கள். சுற்றுச்சூழலுக்கு ஆபத்தான இரசாயனங்களோ, பொருள்களோ உபயோகப்படுத்தமாட்டா. வெறும் கண்ணாடி மற்றும் இரும்புத்தட்டுகளும், ஒரு சுற்றுச்சூழலுக்கு ஆபத்தில்லா வாயுவும் நியுட்ரினோக்களை கண்டறிய போதுமானது.

## காடுகளையும் வயல்களையும் பாதிக்காது.

காஸ்மிக் கதிர்களிலிருந்து உண்டாகும் மற்ற துகள்கள் நியுட்ரினோ சமிக்ஞைகளை (signal) தடங்கல் செய்யாதவாறு இந்த அறிவியற்கூடம் ஒரு மலையின் உள்ளே வைக்கப்படும். மலையின் வெளியே ஒன்றும் சேதப்படுத்த மாட்டாது. காடுகளும் வயல்வெளிகளும் இருந்தவாறே இருக்கும்.

## இது ஒரு வர்த்தக நிறுவனம் அல்ல.

எந்தவித வர்ததக நோக்கமும் இத்திட்டதில் இல்லை. நம் நாட்டை சர்வதேச அறிவியல் சமூகத்தில் முன்நிறுத்த தலைசிறந்த விஞ்ஞானிகளால் வித்திடபட்டதே இத்திட்டம். இந்திய அறிவியற் வரலாற்றில் ஒரு முக்கிய பக்கமாக இது நிச்சயம் விளங்குவதுமன்றி புதுத் தலைமுறை விஞ்ஞானிகளுக்கு ஒரு பெரும் பொக்கிஷமாக இருக்கும்.